

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், 271 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 54,461 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆர். சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம். பன்னீர்செல்வம், நிவேதா எம். முருகன், எஸ். ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், தாட்கோ தலைவர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 147-வது நாள்!

## அம்பத்தூர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது



*சென்னை, ஜூலை 17 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 147 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (16.7.2025) அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 81 தெற்கு பூங்கா தெரு, 2) வட்டம் 80 சேரன் தெரு விஜய லட்சுமிபுரம், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நா டு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது*

*இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ். பி. ராஜகோபால் எம்.சி, எம். டி.ஆர். நாகராஜ், பி.கே. மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்த குமாரி எம்.சி, எல். பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி,*

*து.ஆயிரம், ஜி.வி.நாக வள்ளி எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீர ராகவன், வெ.ராதாகிரு ஷ்ணன், த.கண்ணபிரான், எம். கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத் குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

---

### "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புரட்சிகரமான மக்கள் நலத் திட்டம் மூலம்

# கடைக்கோடி மக்களும் அரசின் சேவைகளைப் பெற்றிட அர்ப்பணிப்போடு பாடுபடுவோம்!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் முடிவு! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

*காஞ்சிபுரம், ஜூலை 17-*

*"உங்களுடன் ஸ்டாலின்" என்ற புரச்சிகரமான மக்கள் நலத் திட்டத்தை கடைக்கோடி மக்களும் அரசின் சேவைகளை பெற்றிட கடமை தவறாமல் அர்ப்பணிப்போடு பாடுபடுவோம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக உள்ளாட்சி பிரதிநிதிகள் கூட்டத்தில் முடிவு என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆலோசனை கூட்டம் மறைமலைநகரில் உள்ள ராணி மகால் திருமண மண்டபத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.*

*மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர்கள் படப்பை ஆ.மனோகரன், செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச் செல்வன், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் எஸ். டி.கருணாநிதி, சரஸ்வதி மனோகரன், உதயா கருணாகரன், நகர மன்றத் தலைவர்கள் ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், கோ. சத்திய மூர்த்தி, தேன்மொழி நரேந்திரன், சாந்தி சதிஷ்குமார், பேரூராட்சி மன்ற தலைவர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், மண்டலக்குழு தலைவர்கள் வே.கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, டி. காமராஜ், எஸ்.இந்திரன் மற்றும் மாநகராட்சி - நகராட்சி - பேரூராட்சி மன்றத் தலைவர்கள் - துணைத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் - துணைத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

*முடிவில் மறைமலைநகர் வடக்கு நகரச் செயலாளர் ஜெ.சண்முகம் நன்றி கூறினார்.*

*இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றி அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியதாவது.:-*

*தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வே தன் வாழ்வு என்று நாளும் மக்கள் பணியாற்றி எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் - நாம் நாளும் போற்றி வணங்கும் - நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள்,*

*கடைக்கோடி மக்களும், அரசுத் துறையின் பல்வேறு சேவைகளை காலத்தே பெற்றிடவும் - இந்த சேவைகளை மக்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கிடும் "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புரட்சிக்கரமான மக்கள் நலத் திட்டத்தை சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார்.*

*அந்த வகையில் மக்களின் வீடு தேடி வரும் உன்தை திட்டமான "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் அடித்தட்டு மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதற்காக அர்ப்பணிப்பு உணர்வோடு*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தங்கள் பகுதியில் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் கோரிக்கை மனுக்களை தந்தால் அரசின் சார்பில் உடனடி நடவடிக்கை எடுத்து உங்கள் கோரிக்கைகளை தீர்த்து வைக்கப்படும் என்ற விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்திடுவது என்றும்,*

*இம்முகாம்கள் நடைபெறும் இடங்களுக்கு தங்கள் பகுதியில் உள்ள பொது மக்களை, கோரிக்கை மனுக்களுடன் அழைத்து வரும் பணியை உள்ளாட்சி பிரதிநிதிகள் மேற்கொள்வது என்றும்,*

*முகாம்கள் நடைபெறும் இடத்திற்கு முன்பு மேஜை - நாற்காலி போட்டு இளைஞர்களை அமரச்செய்து பொது மக்களுக்கு எழுதி தந்து உதவிடுவது என்றும் அத்துடன் இம்முகாம்களுக்கு வரும் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் - டீ - காபி உள்ளிட்டவற்றையும் வழங்கி இம்முகாம்களை வெற்றியடையச் செய்வது என்றும் இக்கூட்டத்தில் ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டது.*

*இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.*





காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மறைமலைநகரில், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றி ஆலோசனைகளை வழங்கினார். அருகில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

---

### 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பு திட்டத்தில்

# மயிலாடுதுறையில் மக்களை நேரடியாகச் சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுப்பினர்களை சேர்த்தார்!

## இதுவரை ஒரு கோடியே 35 லட்சத்து 43 ஆயிரத்து 103 பேர் இணைந்தனர்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தல் ஊராட்சி, அம்பேத்கர் தெருவில் "ஓரணியில் தமிழ்நாடு என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார்.

**மயிலாடுதுறை, ஜூலை, 17-**

**நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கையை கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 3.7.2025 அன்று சென்னை, ஆழ்வார்பேட்டையில் மக்களை நேரடியாக சந்தித்து தொடங்கி வைத்தார்.**

அதனைத் தொடர்ந்து, 10.7.2025 அன்று திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சன்னதி தெருவில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், "ஓரணியில் தமிழ்நாடு"என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில், மக்களை நேரடியாக சந்தித்து, இத்திட்டத்தில் உறுப்பினர்களை சேர்த்தார்.

மேலும், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணியால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை (War Room) 12.7.2025 அன்று கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இணைக்கப்பட்ட மக்களின் விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த கழகத் தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் மன்னம்பந்தல் ஊராட்சி, அம்பேத்கர் தெருவில் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மன்னம்பந்தல் ஊராட்சி மன்ற தலைவர் சூர்யா, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் முருகமணி ஆகியோர் உடனிருந்தனர்.

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பை ஏற்று "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் இதுவரை 1,35,43,103 நபர்கள் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

---

### இருதயக் குறைபாட்டை சரி செய்து

# சாதனை படைத்த சேலம் மருத்துவர்களுக்குப் பாராட்டு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!



*சேலம், ஜூலை 17-*

*சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு நபர்களுக்கு தலையீட்டு சாதனம் மூடல் மூலம் இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைத்துள்ளதை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.*

*சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு நபர்களுக்கு தலையீட்டு சாதனம் மூடல் மூலம் இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைத்துள்ளதையொட்டி மருத்துவர்கள் மற்றும் குணமடைந்தவர்களை நேற்று (16.07.2025) நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.*

*இதில் அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது :-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவ கட்டமைப்பினை தொடர்ச்சியாக மேம்படுத்திடும் வகையில் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். வளர்ந்து வரும் நவீன காலத்திற்கேற்ப மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளார்கள்.*

*அந்த வகையில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் இருதயவியல் துறை சார்பில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு நபர்களுக்கு தலையீட்டு சாதனம் மூடல் (DEVICE CLOSURE) மூலம் இருதய குறைபாட்டை சரி செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.*

*இசைமதி (5 வயது) மற்றும் சபரிநாதன் (16 வயது) ஆகிய இருவரும் வென்ட்ரிகுலர் செப்டல் (VSD) குறைபாட்டினாலும், கௌதம் (15 வயது) மற்றும் சந்தியா (15 வயது) ஆகிய இருவரும் பேடன்ட் டக்டஸ் ஆர்டெரியோசஸ் (PDA), வள்ளி (27வயது) மற்றும் சுகுணா (32 வயது) ஆகிய இருவரும் ஏட்ரியல் செப்டெல் (ASD) குறைபாடு எனப்படும் இருதய நோயால் பாதிக்கப்பட்டு இருந்தனர்.*

*அவர்களது இருதய நோயானது எக்கோகார்டியோகிராபி மூலம் கண்டறியப்பட்டு அவர்களது இருதய குறைபாட்டின் அளவிற்கேற்ப தலையீட்டு சாதனம் கொண்டு கடந்த 12.07.2025 சனிக்கிழமை அன்று முழுமையாக சரிசெய்யப்பட்டது. இதன் மூலம் அவர்களுக்கு பிற்காலத்தில் இருதய செயலிழப்பு மற்றும் மாறுபட்ட இருதய துடிப்பு வராமல் தடுக்க முடியும் மற்றும் இயல்பான வாழ்க்கை வாழலாம்.*

*இந்த வகையான இருதய சிகிச்சை அளிப்பது இது இரண்டாவது முறையாகும். கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நான்கு குழந்தைகளுக்கு இதுபோன்ற இருதய சிகிச்சை அளிக்கபட்டது. இந்த முறை மூன்று குழந்தைகள் RBSK மற்றும் DEIC குழு மூலமாகவும், மூன்று பெண்கள் இருதய துறை புற நோயாளிகள் பிரிவு மூலமாகவும் கண்டறியப்பட்டு, இந்த உயரிய சிகிச்சை அளிக்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர். இந்த உயர்தர சிகிச்சையானது சிறப்பு மருத்துவர் குழுவினர், மயக்கவியல் துறை, இருதய அறுவை சிகிச்சை துறை, இருப்பு மருத்துவர் மற்றும் இருதய மருத்துவத்துறை மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக்குழு மூலம் வெற்றிகரமாக இருதய சிகிச்சை செய்து முடிக்கப்பட்டுள்ளது.*

*குறிப்பாக தனியார் மருத்துவமனைகளில் ரூ. 2 இலட்சம் முதல் ரூ. 3 இலட்சம் வரை செலவாகும் இந்த சிகிச்சை, முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சிறப்புமிக்க சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட மருத்துவர்களுக்கும், குணமடைந்தவர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.தேவி மீனா, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.*



சென்னை சவேரா ஓட்டலில் 13.7.2025 அன்று நடைபெற்ற கோல்டன் சிட்டி அரிமா சங்கத்தின் 31–வது பதவி ஏற்பு விழாவில் சங்க நிறுவனர் அரிமா முரசாலி சிங்காரம் சர்வோதய இயக்க தொண்டர் எஸ்.திருநாவுக்கரசு அவர்களுக்கு குடும்ப நல நிதிக்காக 61 ஆயிரம் ரூபாய் வழங்கினார். உடன் சங்கத் தலைவர் அரிமா சார்லஸ், தலைவர் அரிமா டி.மகேந்திரன் ஆகியோர் உள்ளனர்.